ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,590 — 1958 නොවැම්බර් 21 වැනි සිකුරාදා — 21.11.1958

11,590 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசன இலாகா

மேல் மாகாணம், கொட்டா ரோட்டு, கொழும்பு, இலக்கம் 8, பிரதம நீர்ப்பாசன எஞ்சினியரால் கட்டுமான வேலைகளுக்காக, (a) கல் வெற்றியா அணைக்கட்டு இனிகமவிலும், (b) மா ஓவிற்ற, றெகுலேற்றர், பனுகலவிலும், (c) கல்கந்த அணைக்கட்டுக்குமான கேள்விப் பத்திரங்கள் (a) ரூபா 41,000.00 (b) ரூபா 40,000.00, (c) ரூபா 26,000.00 ஆகக்கும், 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 3 ந் திகதி காலை 11.30 மணி வரையிற் பெற்றுக்கொள்ளப்படும்.

கொப்பிகளடங்கிய கேள்விப் பத்திரங்கள், எல்லா விபரங்களும் அடங்கியுள்ளதாய், அத்தனுஓயா நீர்ப்பாசன எஞ்ஜினியர், ஆபீசில் பெற்றுக் கொள்ளப்படும்.

நீர்ப்பாசன இலாக்காக் கந்தோரிலோ அல்லது அப்பகுதியைச்சேர்ந்த கச்சேரியிலோ ரூபா 50 கட்டியதாகப் பற்றுச்சீட்டுச் சமர்ப்பிப்பவர்களுக்கு, 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29 ந் திகதி, சனிக்கிழமை, கந்தோர் நேரங்களில் கொடுக்கப்படும்.

கேள்விப் பத்திரக்காரர், தாங்கள், கவர்ண்மென்ட் டிப்பாட்மென்டில் கவர்ண்மெண்டுக்கு உகந்தபடி வேலைகளைச் செய்ததாக, வைத்திருக்கும் நற்சாட்சிப் பத்திரங்களையும் கேள்விப்பத்திரங்களைக் கேட்கும்போது சமர்ப்பிக்கவேண்டும்.

அப்படிப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் மாத்திரம், கேள்விப்பத்திரங்களைக் கேட்பதற்கு அங்கீகரிக்கப்படுவார்கள்.

என். டபிள்யு. சுரவீர,
நீர்ப்பாசன இலாக்கா எஞ்சினியர், அத்தனுகலுஓயா,
நீர்ப்பாசனப் பிரிவு.

---

### நீர்ப்பாசன இலாகா

பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர், (திரிகோணமலைப் பகுதி) உவர்மலை, திரிகோணமலை, அவர்களால் 9.12.58 காலை 9.30 மணிவரை, இவ்விலாகாவில் முறையே ரூபா இருபத்து மூவாயிரத்து ஐந்நூற்றிற்கும் (23,500) ரூபா பத்தாயிரத்திற்கும் (10,000) அவைகட்குக் கூடிய தொகைக்கும் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, அல்லே விஸ்தரிப்புத் திட்டத்தில, ஒரு நிரந்தரமான கந்தோரும், ஒரு நிரந்தரமான பண்டசாலையும் கட்டுவதற்குத் தனித்தனிக் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

நீர்ப்பாசன பொறியியலாளர், கல்லார், கிளிவெட்டி அவர்களிடமிருந்து பெறப்படும் கேள்விப்பத்திரங்களில், கேள்விப்பத்திரங்கள் தனித்தனி இருபிரதிகளாகச் சமர்ப்பிக்கப்படவேண்டும். மேலும் தேவையான விபரங்கள் யாவும் இவரிடம் பெறலாம். அத்துடன் இவரது கந்தோரில் கட்டிடங்களின் மாதிரிப்படம் பார்க்கலாம்.

கேள்விப்பத்திரங்கள், தாம் இவ்விலாகாவில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் என்று நிரூபிப்பவர்களுக்கும், நீர்ப்பாசனக் கந்தோர், கல்லார், கிளிவெட்டி அல்லது ஒரு கச்சேரியில் கேள்விப்பத்திரக் கட்டணம் ஒவ்வொன்றிற்கும் ரூபா 25 கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுள்ளவர்களுக்கும் மட்டுமே 6.12.58 நண்பகல் 12 மணிவரை கொடுக்கப்படும். அத்துடன் தற்சமயம், அரசாங்கத்தில் ஒப்பந்தவேலை செய்பவர்கள், கேள்விப்பத்திரம் பெறுவதற்கு, அவ்வேலைக்குப் பொறுப்பாயுள்ள அதிபரிடமிருந்து, அவர் ஒப்பந்தவேலை திருப்திகரமானது என்பதை நிரூபிப்பதற்குரிய அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது, கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தோர், பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். கேள்விப் பத்திரங்கள், பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர், திரிகோணமலைப் பகுதி, திரிகோணமலை, அவர்களால், அவரது கந்தோரில் 9.12.58 காலை 10 மணிக்குத் திறக்கப்படும்.

---

### தபால் தந்திப் பகுதி

#### உபயோகமற்ற தபால் வான்களையும் டயர்களையும் வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்

உபயோகமற்ற தபால் வான்களையும் டயர்களையும் வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு தலைமைத் தபாற் கந்தோர், உதவி தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி அவர்களால் 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ந் திகதி மு.ப. 9.30 மணிவரை கோரப்படுகின்றன.

முழு விபரங்களுக்கு இதே வர்த்தமானியின் பாகம் I பகுதி II (ஆங்கிலம்) விளம்பரங்களைப் பார்க்கவும்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி.

தலைமைத் தபாற் கந்தோர்,
கொழும்பு 1,
1958 ம் ஆு நவம்பர் மீ 18 ந் உ.

---

### கடற்றொழில் பகுதி

#### மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தாங்குடியில் 25 கடற்றொழிலாளர் வீடுகளையும் 3 கிணறுகளையும் நிர்மாணித்தல்

1958 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17 ந் திகதி 11,555 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியான கேள்விப்பத்திர அறிவித்தல் சார்பாக, கேள்விகள் முடிவு திகதி, 1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிவரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரங்கள் 1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ந் திகதி பி. ப. 3 மணி வரையும் வழங்கப்படும்.

டி. ரீ. ஈ. எ. டீ. பொன்செக்கா,
கடற்றொழில் அதிபர்.

கொழும்பு,
1958 ம் ஆு நவம்பர் மீ 13ந் உ.

---

## நானுவித காணி அறிவித்தல்

### காணி அபிவிருத்திப் பகுதி

#### கொந்திருத்துக்காரர்கள் பதிவு செய்தல்

கீழ்க் குறிக்கப்படும் வேலைகளுக்குத் தேவையான கொந்திருத்துக் காரர்களை பதிவுசெய்ய இப்பகுதி நிச்சயித்திருக்கிறது :—

(அ) குடியேற்றத் திட்டங்களில் குடியேற்றவாசிகளின் குடிசைகள் கட்டுவது ;

(ஆ) குடியேற்றத் திட்டங்களில் ஆசுப்பத்திரி, மருந்தகம், அரசாங்க உத்தியோகஸ்தர் வசிக்க வீடுகள் முதலிய கட்டிடங்கள் கட்டுவது ;

(இ) மண்வெட்டுதல், கல் உடைத்தல், கால்வாய்கள், சிறு பாலங்கள் கட்டுவதுடன்கூடிய றோட்டுவேலைகள் ;

(ச) ரோட்டுக்குக் கல்லுப்போடுதலும் தார் போடுதலும் :

(உ) நீர் வழங்கள், வடிகால் வேலைகள் ;

(ஊ) முன்பு இடுகாலோ அல்லது அஸ்பேஸ்டோஸ் அல்லது அலுமினியம் தகடுகளாலோ வேயப்பட்ட குடியேற்றவாசிகளின் குடிசைகளுக்கு ஓடுபோடுதல் ;

(எ) குடியேற்றத் திட்டங்களில் குடியேற்றவாசிகளின் குடிசைகளுக்குத் திருத்த வேலை செய்வது.

இந்தப் பகுதியின் கொந்திருத்துக்காரர்களாக பதிவுசெய்ய விரும்புவோரை கொழும்பில் காலிமுக செக்கிரட்டரியட்டில் இருக்கும் காணி அபிவிருத்தி அதிபரின் காரியாலயத்திலிருந்து நேர்முகமாகவோ அல்லது விண்ணப்பமூலமாகவோ பெறக்கூடிய குறிக்கப்பட்ட விண்ணப்பத்தாளில் விண்ணப்பம் அனுப்புமாறு கோருகிறேன். பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 1958 ம் வருஷம் மார்கழி மாதம் 22 ந் திகதியன்றோ அல்லது முன்போ காணி அபிவிருத்தி அதிபதி, த. பெ. 500, கொழும்பு 1, க்கு அனுப்பப்படவேண்டும்.

காணி அபிவிருத்தி அதிபதி.

த. பெ. நம்பர் 500,
செக்கிரட்டரியட்,
கொழும்பு 1.

---

## விளம்பரம்

1958 ம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) மாதம் 25 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1958 ம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) மாதம் 28 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1958 ம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) மாதம் 24 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னார்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.
1958 ம் ஞு கார்த்திகை (நவம்பர்) மீ 11 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.